**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 232/2022 |
| Deposition of Witness | : | PW–5 |
| Name | : | ராஜமூர்த்தி |
| Father Name | : | தங்கவேல் |
| Village | : | வெள்ளகோவில் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 63 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.02.2026

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வயது மூப்பின் காரணமாக ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 12.05.2022 ஆம் தேதி வெள்ளகோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்றைய தினம் வெள்ளகோவில் காவல் நிலைய முதல் நிலைக்காவலர் சுப்பைய்யா என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது சுப்பன் என்பவரது அசால்ட் இண்டிமேசனை பெற்று காங்கேயம் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது அவர் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனை சென்ற விபரம் தெரிந்து அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சுப்பைய்யா என்பவரது வாக்குமூல புகார் பெற்று பின்னர் நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப காங்கேயம் காவல் நிலைய குற்ற எண்.193/2022 சட்டப்பிரிவு 294(b), 324, 506(2) இதச வின் கீழ் கடந்த 13.05.2022 காலை 8.30 மணிக்கு வழக்கு பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்றொரு நகலை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

2. பின்னர் வழக்கு கோப்புகளை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 13.05.2022 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவசுப்பரமணியம் மற்றும் ராமலிங்கம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேலும், மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினம் காலை 10.45 மணிக்கு இவ்வழக்கின் சொத்தான கைக்கு அடக்கமான சிறிய கல் ஒன்று கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 மற்றும் படிவம் 91 அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் சாட்சிகள் சுப்பன், நாச்சி, பொன்னுச்சாமி, பிரபாகரன், குப்பாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரியான சக்திவேல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்றதால் கைது செய்யப்படவில்லை.

4. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி சுப்பன் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு வழங்கிய காங்கேயம் அரசு மருத்துவமனை மருத்துவர் பிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன்.

5. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட சுப்பன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று மருத்துவர் சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(b), 324, 506(2) இதச வில் இருந்து 294(b), 326, 506(2) இதச வாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். (சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

6. பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலைக்காவலர் சுப்பைய்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

சுப்பரன், நாச்சி ஆகியோர்கள் பொன்னுச்சாமியின் தோட்டத்தில் வேலை செய்யக்கூடிய வேலையாட்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் 2 யை தவிர தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு பக்கத்தில் பூமி உள்ளதா என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் அவருக்கு பக்கத்தில் பூமி இல்லை. எத்தனை ஆடுகள் பொன்னுச்சாமியின் தோட்டத்தில் மேய்ந்தது என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. திருப்பூர் அரசு மருத்துவமனை மருத்துவரை சாட்சியாக விசாரித்து எந்த ஆவணங்களும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். SOC என்பது பொன்னுச்சாமியின் காடு என்றால் இல்லை. தோட்டத்தின் அருகில். ஆடுகளை யார் கல்லை எடுத்து விரட்டிவிட்டார்கள் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் சுப்பன் விரட்டியதாக தெரிந்துகொண்டேன். பொன்னுச்சாமியின் காட்டின் கிழக்கு பகுதியில்தான் சோளம் பயிரிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பொன்னுச்சாமியின் காட்டிற்கு கம்பி வேலிகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பொன்னுச்சாமி என்பவர்தான் கல்லை எடுத்து ஆட்டை விரட்டும்போது சுப்பன் மீது பட்டது என்று சொன்னால் சரியல்ல. சக்திவேலுக்கும், சாட்சி பொன்னுச்சாமி என்பவருக்கும் வழக்கிற்கு முன்பாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். அவர்களுக்குள் காட்டிற்கு கம்பி வேலி போடுவதற்கும், தடம் சம்பந்தமாகவும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். பொன்னுச்சாமி என்பவர் தண்ணீர் விற்பனை செய்து வருகிறார் என்றால் சரிதான். அ.சா.1 சுப்பனை பொன்னுச்சாமிதான் கல்லால் தாக்கினார் என்றும், எதிரிக்கும் அ.சா.1 ற்கும் உள்ள முன்விரோதத்தின் அடிப்படையில் எதிரியின் மீது சுப்பனை வைத்து பொய் புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சிறப்பு உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். சட்டப்பிரிவு 326 யை விசாரிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் பேரில் சரிவர புலன் விசாரணை செய்யாமல்

எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்து வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.17 18:28:28 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்